உ
விநாயகர் துணை



# அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## கேர்ணிங்,டென்மார்க்

## *சோபகிருது வருடப்பிறப்பு விஞ்ஞாபனம்*

ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

சீரும் திருவும் பொலிந்து, சிவசீலர்கள் நிறைந்து, விளங்கும் புண்ணிய பூமியாகிய டென்மார்க் நாட்டின்கண்ணே கேர்ணிங் மாநகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் ஆலயத்தில் எம்பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் **புதுவருடப்பிறப்பு பூஜை 14-04-2023 அன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.33 மணிக்கு சோபகிருது வருடம் பிறக்கும் வேளையில் இடம்பெறும்.** அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகைதந்து, தங்கள் வாழ்வு புத்தாண்டில் புதுப்பொலிவு பெறுவதற்கு எம்பெருமான் விநாயகரை உள்ளன்போடு வழிபாடு செய்து திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

- ***புதுவருடப்பிறப்பு பூஜை* 14-04-2023 வெள்ளிக்கிழமை**

***காலை*** *அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெற்று அதனைத் தொடர்ந்து* **வருடம் பிறக்கும்** வேளையில் **முற்பகல் 10.33 மணிக்கு பூஜை** *இடம்பெற்று நிறைவாக விபூதிப்பிரசாதம் அன்னதானம் வழங்கப்படும்.* ***மாலை19.00 மணிக்கு*** *பூஜை, பஞ்சமுகஅருச்சனை, வசந்தமண்டபப்பூஜை* நடைபெற்று *எம்பெருமான் உள்வீதியுலா வரும் அருட்காட்சியும் இடம்பெறும்.*

*மெய்யடியார்கள் பூஜை அபிஷேகத்திரவியங்கள் வழங்கியும் அபிஷேக பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டும் எம்பெருமானின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.*

***குறிப்பு:*** *ஆலயத்தில் மருத்துநீர்* **வியாழக்கிழமை** ***(13.04.23) மாலை 17.00- 20.00*** *மணிவரையும் வழங்கப்படும்.*

*தொடர்புகளுக்கு:* 97225511, 26683067

இங்ஙனம்
பரிபாலனசபையினர்

**ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்** teglvænget -93, 7400 Herning. www.pillayar.dk